**புதுக்கோட்டை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

(19-10-2016 – 23-10-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 18-10-2016

**கடந்த கால வானிலை 14-10-2016 முதல் 17-10-2016 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 8.3 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 33-35 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 24-25 |
| மேக மூட்டம் | 4-6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 46-79 |
| காற்றின் வேகம்(கி.மீ / மணி) | 4-10 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 23-10-2016 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 19.10.16 | 20.10.16 | 21.10.16 | 22.10.16 | 23.10.16 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 5 |
| அதிக பட்ச வெப்பநிலை(செ) | 34 | 34 | 34 | 34 | 34 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 25 | 25 | 25 | 25 | 25 |
| மேக மூட்டம் | 5 | 5 | 5 | 5 | 5 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 46 | 46 | 46 | 46 | 46 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 6 | 6 | 6 | 6 |
| காற்றின் திசை | கிழக்கு தென்கிழக்கு | கிழக்கு தென்கிழக்கு | கிழக்கு தென்கிழக்கு | கிழக்கு தென்கிழக்கு | கிழக்கு தென்கிழக்கு |

**குறுஞ்செய்தி :**

- வரும் ஐந்து நாட்களுக்கு வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் வறண்ட வானிலையே நிலவும்: அக்டோபர் 23-ம் தேதி மட்டும் இலேசான தூறல் சில இடங்களில் பெய்யக்கூடும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல் மற்றும் கரும்பு**

**பருவம்: குறுவை: முதிர்ச்சி பருவம், சம்பா: விதைத்தல் மற்றும் நடவு**

- எதிர்பார்க்கப்படும் மழை மற்றும் மேகமூட்டம் காரணமாக நெல்லுக்கு மண்வழியாக மேலுரம் இடுவதை தவிர்க்கலாம்.
- தற்போது விதைக்கப்பட்டுள்ள நெல் நாற்றாங்காலில் சாயந்திர வேளைகளில் நீர் நிறுத்தி காலையில் வடிப்பதனால் எதிர்பார்க்கப்படும் மழையின் காரணமாக முளைத்த நெல் விதைகள் மழையில் அடித்துச் செல்வதை தவிர்க்கலாம்.
- நெற்பயிரில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது இதனைக் கட்டுப்படுத்த டைக்கோபால் 500 மி.லி./ஏக்கர் அல்லது நனையும் கந்தகத்தூள் 400 கிராம்/ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.
- கால்நடை குடில்களைச் சுற்றி நீர் தேங்குவதை தவிர்க்கவும். அதன் மூலம் கொசுக்கள் பெருகுவதை தடுக்கலாம்.